அளிக்கிருர்கள் ? அவர்கள் விருப்பப்பட்டால் கொடுக்கலாம் அல்லது மறுக்கலாம் என்ற நிலேயா ? அல்லது ஏதாவது கய்ட் லேன்ஸ், சட்ட திட்டங்கள் இருக்கின்றனவா என்பதை அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்கலேக் கழகம்தான் முடிவு செய்கிறது, எந்த எந்தக் கல்லூரிக்கு அனுமதி தரலாம் என்று. நாம் கேட்டவுடனே, பல்கலேக் கழகம் ஒரு கமிஷனே அனுப்பி, இட வசதி இருக்கிறதா, ஆசிரியர்கள் இருக்கிருர்களா, மற்ற வசதிகள் இருக்கி கின்றனவா என்று பார்த்து அனுமதி அளிக்கிருர்கள். அந்த வகையிலே தான் மாநிலக் கல்லூரி முதல்வர் அவர்களுக்கு இந்த வகுப்புகளே ஆரம்பிக்க வேண்டுமென்று எழுதினேம். அதற்கு அவர்கள் இட வசதி இல்லேயென்று தெரிவித்துவிட்டார்கள். வேறு கல்லூரிகளிலே இந்த வகுப்புகளே ஆரம்பிப்பதைப் பொறுத்த வரையில், பல்கலேக் கழகம் இட வசதியைப் பார்த்து முடிவு செய்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : வசதி வாய்ப்புள்ள இடங்களில் பல்கலேக் கழகம் முயற்சிக்கும், கல்லூரிக் கல்வி இயக்குநர் முயற்சி செய்வார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். இட வசதியுள்ள அரசுக் கல்லூரிகளில் இவ் வகுப்புகளே ஆரம்பிக்க, அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசுக் கல்லூரிகளாக இருந்தாலும், பல்கலேக் கழகத்திடம் அனுமதி பெறவேண்டும். வசதி யுள்ள இடங்களில் ஆரம்பிக்க வேண்டுமென்று, கல்லூரிக்கு கல்வி இயக்கு நருக்குச் சொல்லியிருக்கிருேம். இந்த வகுப்புகளிலே படித்து வெளி யேறுவோர்களுக்கு ஓரளவுக்கு வேலே வாய்ப்புக்கிடைக்கிறது என்ற எண்ணம் இருக்கிற காரணத்திஞல், இந்த வகுப்புகளே ஆரம்பிக்க இட வசதி பெற முயற்சி செய்யுமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிருர். அவர்கள் அந்த வகுப்புகளேப் பல கல்லூரி களிலே ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையைப் பல்கலேக் கழகத்திற் திற்கு அனுப்பி இருக்கிருர்கள்.

திரு. நா. வீராசாமி : தலேவர் அவர்களே, மாநிலக் கல்லூரியில் போதிய கட்டடம் கட்டுகின்ற வரையில் காத்திருக்காமல், பி. ஏ. பட்டப் படிப்புகள், எம். ஏ. பட்டப் படிப்புகளுக்கு உள்ள இடங்களேக் குறைத்து, உடனடியாக, பி. காம்., எம். காம்., சொல்லிக் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதையும் பல்கலேக் கழகம்தான் முடிவு செய்யவேண்டும்.

*விஞ 273 : திரு. வீ. மலேக்கண்ணன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தய்வுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா :—

சென்னேப் பல்கலேக் கழகத்துடன் இணேந்த மாலே நேரக் கல்லூரி களில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் பி. காம்., பட்டம் பெற்ற மாணவர் களே அனுமதிப்பதுகுறித்துப் பல்கலேக்கழகத்திற்குப் பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வீ. மலைக்கண்ணன் : இனிமேலாவது அப்படிச் செய்ய அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாம் பல்கலைக் கழகத்தைக் கேட்டுக்கொள்ளலாம், அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும்.

Meeting of Inter-Media Publicity Co-ordination Committee.

*Q 274—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :—

(*a*) whether the Inter-Media Publicity Co-ordination Committee in Tamil Nadu met during June 1973 in Madras ; and

(*b*) if so, the details of the decisions taken?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :

(அ), & (இ) : பிரச்சார ஒருங்கிணைப்புக் குழுவானது (Inter-Media Publicity Co-ordination Committee) இந்திய அரசால் அமைக்கப்பட்ட ஒன்றாகும். 1973 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நடைபெற்ற அதன் கூட்டத்தில் இந்திய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள்பற்றிச் செவ்விய முறையில் பிரச்சாரம் செய்ய வேண்டிய தேவை குறித்து விவாதிக்கப்பட்டது. ஆனால் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

சிரணிப் பணிகளுக்கான செலவு.

*வினா 275 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழகத்தில் 1972-73 ஆம் ஆண்டில் சீரணிப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ? மாவட்ட வாரியாக ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : 1972-73 ம் ஆண்டில் சீரணித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 12,24,377.